<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>

அசல் வழக்கு எண். 239/2020

இன்று 2025 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 05 ம் நாள் இன்று இந்த வா.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : குமார் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : கிருஷ்ணசாமி | கிராமம் | : வேலம்பாளையம் |
| வயது | : 40 | தாலூக்கா | : திருப்பூர் |
| நாள் | : 05-08-2025 | மாவட்டம் | : திருப்பூர் |

**<u>சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1) தாவா சொத்தை என் தாத்தா கடந்த 1959 ம் ஆண்டு கிரயம் பெற்ற சொத்து என்றால் சரிதான். அந்த சமயம் கிணறுகளுக்கு மின்சாரம் இல்லை என்றால் சரிதான். அந்த காலத்தில் எருதுகளை வைத்து நீர்பாசனம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். அந்த கிணறு க.ச.எண்.443, 440 மற்றும் 441க்கு பொதுவாக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்கண்ட 3 காலைகளின் மொத்த விஸ்தீரணம் 20 ஏக்கர் என்றால் சரிதான். மேற்கண்ட 3 காலைகளின் நீர்பாசனத்திற்கு கிணற்றில் 3 துளைகள் இருந்தது என்றால் சரிதான்.

2) அந்த 3 துளைகளிலும் எருதுகளை வைத்து நீர்பாசனம் செய்வதற்கு தனியாக இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான். கடந்த 1966ம் ஆண்டு என் தாத்தாவும் என் மாமாவும் பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். எனக்கு எத்தனை மாமா என்றால் 5 பேர்கள். அவர்கள் அனைவரும் சேர்ந்து தான் பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த காலத்தில் கிணற்றில் எத்தனை துளை இருந்தது என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அந்த விவரங்கள் என் மாமாவிற்கு தான் தெரியும் என்றால் சரிதான்.

3) என் அம்மாவிற்கு எந்த ஆண்டு திருமணம் நடந்தது என்றால் எனக்கு தெரியாது.

என் அப்பாவின் சொந்த ஊர் வேலம்பாளையம் என்றால் இல்லை பல்லடம். என் அப்பாவின் திருமணத்திற்கு பிறகு அவர் வேலம்பாளையத்தில் இருந்தார் என்றால் சரிதான். என் அப்பா ரோலிங் மில்லுக்கு வேலைக்கு சென்றால் சரிதான். என் அம்மா வீட்டில் இருந்தார் என்றால் தோட்டத்தில் வேலை செய்து வந்தார். யார் தோட்டத்தில் வேலை செய்து வந்தார் என்றால் என் அப்பச்சி தோட்டத்தில் வேலை செய்து வந்தார். அதற்கு சம்பளம் இல்லை என்றால் சரிதான்.

4) நான் என்ன படித்துள்ளேன் என்றால் 9ம் வகுப்பு படித்துள்ளேன். என்னுடன் பிறந்தவர்கள் 4 நபர்கள் என்றால் சரிதான். எனது சகோதரர் பெயர் வேலுச்சாமி என்றால் சரிதான். 2வது சகோதரன் பெயர் பழனிச்சாமி 3வது சுப்பிரமணியம் ஆவர். கடந்த 1996ம் ஆண்டு நான் படித்துக் கொண்டிருந்தேன் என்றால் சரியல்ல. வேலைக்கு சென்று கொண்டிருந்தேன். என் அம்மா 1996ம் ஆண்டு என் அப்பாவின் வருமானத்தை வைத்து தான் சொத்தை கிரயம் பெற்றார் என்றால் என் அப்பாவின் வருமானம், எங்களுடைய வருமானத்தை வைத்து கிரயம் பெற்றார்.

5) கூட்டுக் குடும்ப நிதியை கொண்டு தான் சொத்தை கிரயம் பெற்றார் என்றால் சரிதான். நான் சிறுவயதாக இருக்கும் போதே என்அப்பா இறந்து விட்டார். என் அப்பா வைத்துச் சென்ற பணத்தை வைத்து தான் கிரயம் பெறப்பட்டது என்றால் என் அண்ணன், தம்பி ஆகியோரின் வருமானம் கொண்டு கிரயம் பெறப்பட்டது. நான் தவறாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. கூட்டுக் குடும்ப நிதியை வைத்து கிரயம் பெறப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பழனிச்சாமிக்கு பங்கு உள்ளது என்றால் சரியல்ல.

6) நான் தட்டச்சு நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன் என்றால் சரிதான். நான் எப்போது வேலைக்கு சென்றேன் என்றால் கடந்த 1990ம் ஆண்டில் இருந்தே வேலைக்கு சென்றேன். நான் படித்தற்கான சான்றிதழ்கள் உள்ளதா என்றால் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். நான் எந்த ஆண்டு பாகம் பிரித்துக் கொண்டோம் என்றால் கடந்த 2019ம் ஆண்டு செய்து கொண்டோம். நாங்கள் 3 சகோதரர்கள் மட்டும் பாகம் செய்து கொண்டோம் என்றால்

சரிதான். சுப்பிரமணியத்தையோ, அவரது வாரிசுகளையோ இந்த தாவாவில் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

7) எனக்கு தமிழ் படிக்கத் தெரியுமா என்றால் தெரியும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 ஆவணம் நானும் என் அண்ணனும் சேர்ந்து எழுதியது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ல் க.ச.எண்.441/ஏ 19 காலையில் உள்ள சொத்தானது நமக்கும் நம் உறவினர் பழனிச்சாமிக்கும் பொதுவில் பாத்தியம் என்று கண்டுள்ளது என்றால் சரியல்ல. கிணற்றிற்காக மட்டும் தான் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. நான் 25 செண்ட் இடத்தை அபகரிக்க வேண்டி பொய்யாக வழக்கு தாக்கல் செய்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8) இந்த வழக்கில் பதில் அறிவிப்பு அனுப்பியதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை நான் வழக்கிற்காக அறிவிப்பு தயார் செய்து தாக்ல செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியும் எந்த அறிவிப்பும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல.

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

Sd/–A.Vanitha
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.